பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 25 திங்கட்கிழமை 10.08.2020 கதிர் 274

### இனி இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த மாவை சேனாதிராசா 2014 செப்ரெம்பரில் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

அப்போது நான் ஒரு கட்டுரை வரைந்தேன். இந்த விவகாரம் 'பதவி உயர்வா? பக்கம்02 »

### தேசியப் பட்டியல் ஆசனம் மாவைக்கே!

# சம்பந்தனின் முடிவுக்கு எதிராக சித்தர், செல்வம் போர்க்கொடி!

யாழ்ப்பாணம், ஒக 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு வழங்குவதே சிறப்பானது எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன் (புளொட்), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ) ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

அதேவேளை, தேசியப் பட்டியல் உறுப்பினராக தவராசா கலையரசன் தெரிவு செய்யப்பட்டமை தன்னிச்சையான முடிவு என்று அவர்கள் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் நேற்றுக் காலை அறிவித்திருந்தார். அதன்பின்னரே பக்கம் 03 »

# தலைவருக்கே அறிவிக்காமல் தேசியப் பட்டியல் நியமனம்!

## ஒருபோதுமே அனுமதியேன் என்கிறார் மாவை
## அது தனக்கே உரியது என்றும் அவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட்10

**"தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக உள்ள எனக்கே தெரியாமல் – என்னிடம் எந்தவொரு ஆலோசனையையும் பெறாமல் கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தில் கலையரசனுக்கு வழங்கியுள்ளனர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கமும். பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குக் கூடக் கூறாமல் எடுக்கப்பட்டுள்ள இந்த எதேச்சாதிகாரமான முடிவை நான் முற்றாக எதிர்க்கின்றேன். இதற்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டேன்."**

**– இவ்வாறு நேற்று காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.**

பக்கம் 03 »

## கலையரசனின் நியமனம் உடனடி இடைநிறுத்தம்!

### தேசியப் பட்டியல் சர்ச்சை வலுத்ததை அடுத்து

திருமலை, ஒக 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலையரசனுக்கு வழங்கிய தேசியப் பட்டியல் நியமனத்தைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செய லாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அம்பாறையைப் பிரதிநிதித்துவப்ப டுத்தும் வகையில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளருமான தவராசா கலையரசன் பக்கம் 02 »

## செயலாளர் பதவியை துறக்கவே வேண்டாம்

### துரைராஜசிங்கத்திடம் சம்பந்தன் வேண்டுகோள்

திருமலை, ஒக 10

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியைத் பக்கம் 02 »

## அமைச்சரவை புதனன்று பதவியேற்பு

இருபத்தியாறு அமைச்சர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை நாளை மறுதினம் புதன்கிழமை கண்டிய அரண்மனையின் பக்கம் 02 »

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக.10

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வி அமைச்சு பக்கம்02 »

## நாடாளுமன்றுக்குள் நுழையும் ஞானசாரர்

### கட்சிக்குள் இழுபறி

'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கலகொட அத்தே ஞானசார தேரரை நிய பக்கம் 02 »



## 8 மாணவிகள் மீது மோதி ஏறிச் சென்ற கப் வாகனம்

### ஒருவர் சாவு; எழுவர் காயம்

கொழும்பு, ஒக 10

தெஹியத்தகண்டி – அரலகங்வில பிரதான வீதியின் போகஸ் சந்திப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 7 மாணவிகள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக வகுப்புக்குச் சென்ற குறித்த மாணவிகள் மீது கப் ரக வாகனம் ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## புதிய அரசை எதிர்கொள்வது குறித்து சிந்திக்க வேண்டும்!

### கூறுகின்றார் சுமந்திரன்



கொழும்பு, ஒக 10

தென்னிலங்கையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு ராஜபக்ஷக்கள் பலமான ஆட்சியமைத்திருக்கிறார்கள். நாமோ அதை எவ்வாறு எதிர்கொள்வது, ஏனைய சிறுபான்மையினரோடு எப்படிச் சேர்ந்தி பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப் பறிப்பா?' என்ற கேள்வியுடன் விடயங்களை நான் அலசியிருந்தேன். அந்தக் கட்டுரையில் நான் குறிப்பிட்ட அம்சங்களின் ஆழமான பொருளை மாவை சேனாதிராசாவும் அவரின் நெருங்கிய ஆதரவாளர்களும் இப்போது நன்கு புரிந்து கொள்வர் என நினைக்கிறேன்.

அந்தக் கட்டுரையின் அடிப்படையைப் புரிந்து கொள்வதற்கு அப்போதைய களச் சூழமைவை வாசகர்களுக்கு நினைவூட்டுவது பொருத்தமானது.

2013 செப்ரெம்பரில்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தது. அந்தச் சமயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன். கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா.

கட்சியின் சார்பில் ஆவணங்களில் ஒப்பமிடும் அதிகாரம் பொதுச் செயலாளர் என்ற முறையில் மாவையிடம்தான் இருந்தது.

அச்சமயத்தில்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தல் வந்தது. முதலமைச்சராகும் கனவுடன் மாவை இருந்தார். ஆனால் சம்பந்தனோ நீதியரசர் விக்னேஸ்வரனை அப்பதவிக்கு நிறுத்த விரும்பினார்.

மாவை தரப்பும் விடவில்லை. விடாப்பிடியாக நின்றது.

எது, எப்படி என்றாலும் வேட்பாளர் பட்டியலில் ஒப்பமிடும் அதிகாரம் செயலாளரான மாவையிடமே இருந்தது. மாவையை இணங்கச் செய்யாமல் எதுவும் செய்ய முடியாது என்ற இக்கட்டு சம்பந்தன் தரப்புக்கு. அதனால் மாவையைக் கெஞ்சிக் கூத்தாடி, வற்புறுத்தி, தாஜா பண்ணியே தமது யோசனைக்கு இணங்க வைக்க வேண்டியவரானார் சம்பந்தன். அன்றே யோசித்து ஒரு 'பிளான்' பண்ணினார் அரசியலில் கிழட்டு நரியான சம்பந்தன்.

கூட்டமைப்புத் தலைவர் பதவியைத் தாம் வைத்துக் கொண்டு தமிழரசுத் தலைவர் பதவியை மாவைக்கு விட்டுக் கொடுக்கின்றார் என்று அறிவித்தார். உண்மையில் அதுவல்ல நோக்கம்.

தமிழரசுக் கட்சித் தலைவர் என்ற பொம்மைப் பதவிக்கு மாவையை நகர்த்தி விட்டு, தமிழரசு மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் வேட்பாளர் நியமனப் பத்திரங்களில் ஒப்பமிடும் அதிகாரம் வரைக் கொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை மாவையிடமிருந்து பிடுங்கும் திட்டம்தான் அது.

கனகச்சிதமாகக் காய் நகர்த்திய சம்பந்தன் தமது 'போடுதடி' போன்ற துரைராஜசிங்கத்தைப் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமித்து, கட்சியின் கொண்ட்ரோலை' முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

இதன்மூலம் எதிர்காலத்தில் வேட்பாளர் நியமனங்கள் மற்றும் கட்சி தொடர்பான நடவடிக்கைகளில் மாவையின் கருத்துக்குத்தான் பார்த்திருக்கத் தேவையில்லை, தம்பாட்டில் விடயங்களை நகர்த்தலாம் என்று தனது நிலையை உறுதிப்படுத்தினார் சம்பந்தன்.

அதன் விளைவைத்தான் இன்று மாவையர் அனுபவிக்கின்றார்.

கட்சித் தலைவர் என்ற – சட்ட ரீதியாக அதிகாரம் இல்லாத – ஒரு பொம்மைப் பதவி நிலைக்குத் தம்மை நகர்த்தி விட்டு, தமது ஆளை கட்சியின் செயலாளர் நாயகம் பதவிக்கு நியமித்து விடயத்தைக் கொண்டு செல்கின்றார் சம்பந்தன்.

கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவிற்கே தெரியாமல் சம்பந்தனால் செய்ய முடிகின்றது என்றால் –

2014 இல் தமக்குத் கிடைத்தது, பதவி உயர்வா? அதிகாரப் பறிப்பா?' என்பதை மாவை சேனாதிராசா இப்போது உணர்ந்து, புரிந்து கொள்வார் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் தமிழ் தேசியக் கட்சியும் ஒன்று. அதில் இரண்டு பேர்தான் முக்கிய பிரமுகர்கள். ஒருவர் – கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா. மூத்த சட்டத்தரணி. மற்றவர் – கட்சியின் செயலாளர். சிவாஜிலிங்கம். நமது 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி.

கடந்த பொதுத் தேர்தலில் அவர்களின் கூட்டணியினால் மட்டுமல்ல, கட்சியாலும் அதிகம் சாதிக்க முடியவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெண் வேட்பளரான சசிகலா ரவிராஜ் கொஞ்சம் குழம்பி, கட்சியின் சக வேட்பாளர்கள் குறித்து முரண்டுபிடித்து, முறுக்கிக் கொண்டு நிற்கையில் அங்கு பிரசன்னமாகினர் ஸ்ரீகாந்தா – சிவாஜி இணை. கூடவே அனந்தி வேறு.

ஆனால், என்னவோ ஆரம்பத்தில் அத்தகையோரின் உசுப்பேத்தலுக்கு எடுபட்ட சசிகலா ரவிராஜ் திடீரென சுருதியை மாற்றிக் கொண்டு விட்டார். வாக்கு மோசடி ஏதும் நடைபெறவில்லை என்று அவரே தெளிவுபடுத்தியிருக்கின்றார் எனத் தகவல்.

இதற்கிடையில், தமிழரசுவின் தேசியப் பட்டியல் நியமனத்தில் மாவைக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாக ஒரு பேச்சடிபட்டதும் சிவாஜி – ஸ்ரீகாந்தா இணை நேற்று மாலை அங்கு மாவையர் வீட்டுக்கு, திடுதிப்பென பிரசன்னம்.

பிற கட்சிகளில் – குறிப்பாக தமிழரசில் – எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அங்கு போய் நின்று தூண்டி விடும் வேலையைப் பார்ப்பதை விடுத்து, தமது கட்சியின் வேலைகளை இவர்கள் பார்த்தால் நல்லது என்பது என் எண்ணம்.

கடந்த வாரம் வரை மேடைகளில் மாவையரையும் சேர்த்துத் திட்டித் தீர்த்து விட்டு – இப்போது உள்கட்சிப் பிரச்சினையை அவர் கையாளும் போது – அதற்காக வருந்துபவர்கள் போலவும், குசலம் விசாரிப்பவர்கள் போலவும் உள்ளுக்குள் புகுந்து அரசியல் செய்ய முனைவது பொறுப்பற்ற போக்குத்தான். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசர்களே...?

–மின்னல்–

## கலையரசனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற விடயத்தை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு நேற்றுக் காலை கடிதம் மூலம் தெரியப்படுத்தினோம்.

எனினும், இந்த விடயத்தில் நாம் நடந்துகொண்ட விதம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய இரு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் எம்மிடம் முறையிட்டுள்ளார்கள்.

கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவைக் கூட்டி தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவருக்குத் தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குமாறும் தமிழரசுக் கட்சியின் யாழ். கிளையிலிருந்து எமக்கு அழுத்தம் வந்துள்ளது.

இதையடுத்து கலையரசனுக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் நியமனத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். அம்பாறையில் இம்முறை தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் மீண்டும் அவருக்குத்தான் அந்த ஆசனத்தை வழங்குவதா? அல்லது அந்த ஆசனத்தை தமிழரசுக் கட்சியின் தலைவருக்கு வழங்குவதா? என்பது தொடர்பில் விரைவில் ஒரு முடிவு செய்வோம் – என்றார்.

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

200 இற்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசா லைகளைத் தவிர, ஏனைய பாடசாலை களை கட்டம் கட்டமாக ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

200 இற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட 2ஆம் நிலை பாடசாலைகளில் ஆரம்ப தர மாணவர்கள் வாரத்தில் ஒருநாள் மட்டுமே பாடசாலைக்கு அழைக்கப்படுவர்.

தரம் 5 மாணவர்களுக்கு வாரத்தில் 5 நாள்களிலும் பாடசாலை நடத்தப்படும். எனினும் கற்றல் செயற்பாடுகள் இடம் பெறும் நேரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும் அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் போது சுகாதார வழிகாட்டுதல்களை அவசியமாக கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து அதிகாரிகளையும் கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் 11ஆம், 12ஆம் மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. பொதுத்தேர்தலை முன்னிட்டு அனைத்து பாடசாலைகளுக்கும் ஒருவார காலம் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

## நாடாளுமன்றுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் ஊடகச் செயலாளர் எரந்த நவரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசர தேரரை நியமிக்க, அக்கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, இது தொடர்பான அறிவித்தலை கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 'எங்கள் மக்கள் சக்தி' நாடு முழுவதுமாக, 67 ஆயிரத்து 758 வாக்குகளைப் பெற்றதற்கு அமைய, ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இதேவேளை, அக்கட்சியின் செயலாளரான வேதினிகம விமலதிஸ்ஸ தேரர், குறித்த தேசியப் பட்டியல் பதவிக்கு தன்னை நியமிக்குமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசார தேரர் உள்ளிட்டோரினால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவுடன், சத்தியக்கடதாசி உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்து, தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரினால், அவ்வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அக்கட்சி சார்பில் அத்துரலிய ரத்தன தேரரை நியமிக்க வேண்டும் என ஒரு சாரர் தெரிவித்து வரும் நிலையில், இது தொடர்பான முடிவு இழுபறியிலேயே உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செயலாளர் பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறக்க வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் மக்கள் எனக்கு ஆணை வழங்காதமையால் பொதுச்செயலாளர் பதவியைத் துறக்க அனுமதி வழங்க வேண்டும் என்று சம்பந்தனிடம் கேட்டுக்கொண்டேன்.

எனினும், பல தேர்தல் கடமைகள் பொதுச்செயலாளர்களுக்கு இருக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக எங்களுடைய பொதுச்சபைதான் தீர்மானம் எடுக்க வேண்டும். ஆகவே, பதவியைத் துறக்கவே கூடாது என சம்பந்தன் கூறினார்.

இதனால் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய பொறுப்புடையவனாக இருக்கின்றேன் – என்றார்.

## புதிய அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யங்குவது என்பதைத் தவிர்த்து மீதி எல்லாவற்றையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

– இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனை கூறியுள்ளார்.

அந்த பதிவில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

தேர்தல் முடிவுகளை முன்னிறுத்திச் செய்யப்பட்ட போலிச் சலசலப்புகளுக்கு இந்தப் பக்கத்தினூடு உடனடிப் பதிலை நாம் வழங்கவில்லை என எமது நண்பர்கள் பலர் கவலை கொண்டதை நாம் அவதானித்தோம்.

எதுவித அடிப்படைகளுமின்றி, தீய எண்ணத்தில் அவிழ்க்கப்படும் 100 வீத போலி வதந்திகளுக்கு சூட்டோடு சூட்டாக, முண்டியடித்துக் கொண்டு பதில் வழங்குவது வதந்திகளை, அந்த நிலையிலிருந்து நாமாகத் தரமுயர்த்துவதாக அமைந்துவிடும்.

இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறோம். எம்.ஏ.சுமந்திரனைக் குறி வைத்து வடக்கிலும், தெற்கிலும் இப்படியான போலிப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவது இது முதற் தடவை அல்ல.

இது இறுதிச் சந்தர்ப்பமும் அல்ல. இது போன்ற காட்சிகள் மீண்டும், மீண்டும் அரங்கேறத்தான் போகின்றன.

ஊடகங்களையும், சமூக வலைத்தளங் களையும் வைத்து எந்தளவிற்கு இலகுவாகக் குறித்ததோர் கூட்டு மனப்பான்மையைக் கட்டமைக்கலாம், ஒருவர் மீதான வெறுப்புணர்வை வளர்க்கலாம், நல்லெண்ணம் கொண்டவர்களைக் கூட உணர்ச்சியூட்டித் திசை திருப்பலாம் என்பதை கடந்த இரண்டு நாள் காட்சிகள் எமக்குப் புலப்படுத்தியிருக்கின்றன.

இதன் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதையும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். தென்னிலங்கையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு ராஜபக்ஷக்கள் பலமான ஆட்சியமைத்திருக்கிறார்கள்.

நாமோ அதை எவ்வாறு எதிர்கொள்வது, ஏனைய சிறுபான்மையினரோடு எப்படிச் சேர்ந்தியங்குவது என்பதைத் தவிர்த்து மீதி எல்லாவற்றையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். எதிர்வரும் காலங்களிலும் நிதானம் மிக அவசியமாகிறது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையாளர் அரங்கில் (முகுல் மடுவ) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கின்றது.

நேற்று புதிய பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட மஹிந்த ராஜபக்ஷ நாளை காலையில் அலரிமாளிக்கையில் தமது பதவிப் பணிகளை ஆரம்பிக்கவிருக்கின்றார்.

## தலைவருக்கே.........................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை மாவை சேனாதிராசாவின் சம்மதம் பெறாமல் கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம் அம்பாறை மாவட்டப் பிரதிநிதி கலையரசனுக்கு வழுங்கியமையால் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் கூறியவை வருமாறு:-

தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் நான் சில திட்டங்களை வைத்திருந்தேன். தேசியப்பட்டியலில் பெண்பிரதிநிதியானசசிகலாரவிராஜுக்குமுன்னுரிமை அளிப்பதற்கு எண்ணியிருந்தேன். அத்துடன் அம்பாறை மாவட்டத்தையும் கவனத்தில் கொள்ளும் எண்ணம் எனக்கு இருந்தது. தேசியப்பட்டியலில் நான் நாடாளுமன்றம்செல்வதை முதலில் விரும்பவில்லை. ஆனாலும் கட்சிக்கு ஏற்பட்ட இந்தத் தோல்வி, நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளமையாலும் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் மூத்த உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், வெளிநாடுகளில் உள்ளவர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கைகளை அடுத்தும் கட்சியைக் காப்பதற்காக தேசியப் பட்டியல் ஆசனத்தை நான் பெறுவதற்கு சம்மதித்தேன்.

தமிழ் அரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.வீ.கே சிவஞானம் தலைமையிலான குழுவினர் இது தொடர்பில் என்னோடு வந்து பேச்சு நடத்தினர். தேசியப் பட்டியல் ஆசனத்தை நானே பெறவேண்டும் என அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். இது தொடர்பில் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருடன் பேச்சு நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர் என்றும் நீங்கள் சம்மதம் தெரிவித்தால் தாம்பேச்சுக்குச்செல்வதாகவும்அவர்கள்கூறினார்கள். அவர்களின் வலியுறுத்தலை அடுத்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் அதற்கு சம்மதித்தேன். இதனை அடுத்து சிவஞானமும் குலநாயகமும் திருகோணமலைக்கு சென்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைச் சந்தித்துப் தேசியப் பட்டியல் ஆசனத்தை எனக்கு வழுங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இதன்போது அங்கு கருத்து வெளியிட்ட சம்பந்தன், தேசியப் பட்டியல் ஆசனத்தை மாவை ஏற்பதற்கு தயாராக இருக்கின்றாரா என்று சிவஞானத்திடம் கேட்டார். அதற்கு மாவையின் சம்மதத்துடனேயே தாம் பேச்சு நடத்த வந்துள்ளதாக அவர்கள் சம்பந்தனிடம் கூறினார்கள். இதனை அடுத்து சிவஞானம் தனது தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் பேசுவதற்கு ஏற்பாடு செய்தார். சம்பந்தனுடன் நான் பேசியபோது தேசியப்பட்டியல் ஆசனத்தில் நான் நாடாளுமன்றத்திற்குச் செல்வதற்கான சம்மதத்தைத் தெரிவித்தேன். அதற்கு சம்பந்தன் கட்சி பொதுச் செயலரிடம் கூறி அதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக என்னிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த விடயத்தை நான் அவ்வளவு அலட்டிக்கொள்ளவில்லை. ஆனாலும் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு வேறு ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் இடம் வருவதாக எனக்குத் தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து நேற்று காலை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தொடர்புகொண்ட நான் தேசியப்பட்டியலில் நான் இடம்பெறுவதற்கு சம்மதம் தெரிவித்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமமை குறித்து அவருக்கு தெரியப்படுத்தினேன்

இதன் பின்னர் கட்சி பொதுச்செயலருடன் தொடர்பை ஏற்படுத்திய நான் தேசியப் பட்டியலில் எனது பெயரை உள்ளடக்கும் நடவடிக்கை இதுவரை எடுக்கப்படாமல் உள்ளமை குறித்து அவரிடம் வினவினேன். உடனடியாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் கூட்டமைப்பின் தலைவரும் அது தொடர்பில் சம்மதம் வெளியிட்டுள்ளமையால் தாமதிக்காமல் அதனை மேற்கொள்ளுமாறும் அவருக்குக் கூறினேன்.

அதற்கு அவரும் சம்மதம் தெரிவித்தார் . பின்னர் கூட்டமைப்பின் தலைவருடன் தொடர்பு கொண்ட நான் தேசியப் பட்டியலில் தனது பெயரை இடம்பெற வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமை குறித்து அவரிடமும் முறையிட்டேன். முன்னர் நான் பேசியபோது அதற்கு சம்மதம் என்று தெரிவித்த சம்பந்தன் நேற்றுக் காலை நான் இந்த விடயத்தை குறிப்பிட்டபோது தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறைக்கு வழுங்குவது குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும் என்றும் ஆனாலும் கட்சித் தலைவர் என்ற ரீதியில் நீர் அந்த இடத்திற்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளமையால் அதனைச் செய்வதற்கான நடவடிக்கைகளைக் கட்சி செயலரிடம் கூறித் தான் மேற்கொள்வார் என்று என்னிடம் தெரிவித்தார்.

இதனை அடுத்து ஒரு சில மணித்தியாலங்களில் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனின் பெயர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இதனை அடுத்து உடனடியாக அவரைத் தொடர்பு கொண்ட நான், கட்சித் தலைவர் ஆகிய எனது சம்மதம் இல்லாமல் எப்படி இந்த நியமனத்தை வழுங்குவீர்கள் என்று அவரிடம் கேள்வி எழுப்பினேன். அதற்கு அவர், நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தேசியப்பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனுக்கு வழுங்குவதாக முடிவு எடுக்கப்பட்டது என்று என்னிடம் தெரிவித்தார். அதற்கு நான், கட்சித் தலைவர் ஆகிய எனக்கு எந்தத் தகவலும் கூறாமல் இது தொடர்பில் எனது சம்மதத்தையும் பெறாமல் இந்த நியமனம் வழுங்கப்பட்டுள்ளது, இதனை வழுங்குவதற்கு முன்னர் நான் இரு தடவைகள் உங்களிடம் பேசும்போது நீங்கள் இது பற்றி எனக்கு ஒரு சிறிய தகவலையும் தெரிவிக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் பேசும் போதும் கூட அவரும் இது பற்றி எதுவும் கூறவில்லை. தேசியப் பட்டியல் ஆசனத்தை எனக்கு வழுங்குவதாக சம்மதம் தெரிவித்து விட்டு பின்னர் அதனை எனக்குத் தெரியாமல் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனுக்கு வழுங்கியுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கட்சிச் செயலர் என்றவகையில் அதற்கு நீர் தான் பொறுப்பு. எனது சம்மதம் இல்லாமல் எனக்கு தெரியாமல்வழுங்கப்பட்ட இந்த நியமனம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை துரைராஜசிங்கத்திடம் உறுதியாக தெரிவித்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் அபிப்பிராயத்தை பெறாமல் என்னது சம்மதத்தையும் கேட்காமல் இந்த நியமனத்தை வழுங்கியமை பாரதூரமான விடயம் என்று தெரிவித்தேன்.

தேசியப் பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழுங்க வேண்டும்என்பதுதொடர்பில்நானேதீர்மானித்துமுடிவெடுப்பேன் என்று துரைராஜசிங்கத்திடம் தெரிவித்தேன்.

இதற்குப் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். தேசியப் பட்டியல் ஆசனத்தால் சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்த விடயத்தில் நீங்கள் தலையிட்டு முடிவு செய்யுமாறு அந்தக் கடிதத்தில் அவர் கோரியுள்ளார். அதற்கான பதில் கடிதத்தை நான் அவருக்கு அனுப்பி வைத்துள்ளேன். தேசியப் பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழுங்குவது என்பது தொடர்பில் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் பேசி பொருத்தமான முடிவு எடுப்பேன் என்று எனது பதிலில் நான் தெரிவித்திருக்கிறேன் - என்றார்.

## சம்பந்தனின் முடிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளார்கள்.

**சித்தார்த்தன்**

இது தொடர்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

தேசியப் பட்டியல் ஆசனத் தெரிவு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் பங்காளிக்கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கும் அறிவிக்கப்படாமலேயே முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த முடிவு ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவு இல்லை. எமக்கு அறிவிக்கப்படாமல் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டமைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறித்த தேசியப் பட்டியல் ஆசனத்தை மாவை சேனாதிராஜாவுக்கு வழுங்குவதே சிறப்பானது. இது குறித்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது. - என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் கருத்தையும் கேட்டு தேசியப் பட்டியல் குறித்த முடிவை எடுத்திருக்க வேண்டும் என அதன் தலைவர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

இந்தநிலையில், தேசியப்பட்டியலை மாவை சேனாதிராஜாவுக்கு வழுங்காமல் தவராசா கலை யரசனுக்குத் தன்னிச்சையாக வழுங்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னாரில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட் டியல் ஆசனத்தை பங்காளிக் கட்சிகயான புளொட் மற்றும் ரெலோ ஆகிய இருகட்சிகளுடன் எவ்வித ஆலோசனைகளும் நடத்தாமல் அம்பாறை மாவட் டத்துக்கு வழுங்கி வைத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்துக்கு குறித்த தேசியப் பட்டியல் ஆசனம் வழுங்கப்பட்டமைக்கு ரெலோ எவ்வித எதிர்ப்பும் இல்லை. ஏனைய மாவட்டங்களில் பிரதிநிதித்துவம் இருக்கின்றமையினால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஏனையவர்க ளினால் மிகவும் மோசமான செயற்பாடுகளினால் பாதிக்கப்படுகின்றனர்.

அடக்குமுறைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது மக்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் தேவை. அந்தப் பிரதிநிதித்துவத்தை அம்பாறை மாவட்டத் துக்கு வழுங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால், ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிலும் கலந்தாலோசிக்க வேண்டிய நிலையுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தன்னிச்சையாக குறித்த தெரிவை மேற்கொண்டு இருக்கின்றார் என்பது வேதனையை ஏற்படுத்தி யுள்ளது. சிறிய விடயத்திலே இவ்வாறு நடந்து கொண்டதால் எதிர் காலத்தில் நடைபெறப்போகும் நிலைமை குறித்தே எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

எங்களோடும் கலந்தாலோசித்து எடுக்கப்படு கின்ற முடிவுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் இருக்கின்ற அனைவரும் ஆதரவை வழுங் குவோம்.

ஏற்கனவே, எமக்கு ஆசனங்கள் குறைவடைந்துள்ளன. எங்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை என்கின்ற நிலைப்பாடு உள்ளது. அந்தவகையிலே இவ்வாறான சம்பவங்கள் காலப்போக்கில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

மாவை சோனதிராஜாவிடம் கூட ஆலோச னைகள் பெற்றார்களா என்று தெரியவில்லை. குறித்த தேசியப் பட்டியல் ஆசனமானது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து வழுங்கப்பட்டிருக்க வேண்டும். தன்னிச்சையான முடிவை நாங்கள் எதிர்க்கின்றோம். இவ்வாறான தன்னிச்சையான முடிவு இனி எந்தக் காலத்திலும் மேற்கொள்ளப்படக் கூடாது.

சம்பந்தன் ஒரு வயது முதிர்ந்தவர். அனுபவம் உள்ளவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக உள்ளவர். இவ்வாறான சம்பவங்கள் எமது மக்களை சஞ்சலத்துக்கு உள்ளாக்கும். எனவே, குறித்த தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழரசுக்குள் குழப்பம்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவு தமிழரசுக் கட்சிக்குள் பெருங்குழப்பமாக உருவெடுத்திருக்கின்றது.

கட்சித் தலைவரும், செயலாளரும் கூடத் தோற்றுப் போனமை பெரும் களேபரங்களுக்கு வித்திட்டிருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்புக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் எம்.பி. ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்ற சிக்கல் பூதாகரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

சில சமயங்களில் தமிழரசுவின் சிதறலுக்கு இதுவே கூட ஆரம்பப் புள்ளியாக அமையக் கூடும். அவ்வளவு தூரத்துக்கு உள்விரிசல் மோசடைந்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

கூட்டமைப்பின் பங்களாகிக் கட்சிகளான புளொட்டினதும், ரெலோவினதும் தலைவர்கள் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவின் பக்கம்.

அதற்குக் காரணம் இருக்கலாம். தமிழரசில், மறுபுறத்தில் சம்பந்தன், சுமந்திரன், ஸ்ரீதரன் போன்றோர் என்ற தோற்றப்பாடு வெளிப்படுவதால், தேர்தலில் தோற்றுப் பலவீனமுற்றவர் போல நிற்கும் மாவையர் பக்கத்தை வலுப்படுத்தி நின்றால்தான் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டு மோதல் ஜாரிக்கு ஜாரி நின்று சூடு பிடித்துத் தீவிரம் பெறும். அப்படி உள்வீட்டு மோதலில் சிக்கித் தமிழரசு பலவீனப்பட்டாலாவது கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சிகளான தங்களுக்கு தமிழரசுக்குச் சமமான அதிகாரம், அந்தஸ்துக் கிடைக்காதா என்ற அவற்றின் ஆதங்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எது, என்னவென்றாலும் கட்சியின் தேசியப் பட்டியல் இடத்துக்கு ஒருவரை நியமிப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் ஒரு முறையான கலந்துரையாடல் நடைபெறவில்லை என்பது வெளிப்படையானது.

தமிழரசின் செயலாளரும், சம்பந்தனும், இன்னும் ஒரு சிலரும் தங்களுக்குள் பேசித் தீர்மானித்து, தேசியப் பட்டியலை அப்பாறை மாவட்டத்தில் விருப்புவாக்குகளை அதிகம் பெற்றவருக்கு வழங்குவது என்று முடிவெடுத்துத் தேர்தல் ஆணையத்துக்கு அறிவித்து விட்டனர் என்று தகவல்.

தேசியப் பட்டியலில் யாருக்கு வழங்குவது என்ற தெரிவில் மாவை சேனாதிராசாவும் ஒரு போட்டியாளர் என்பதால் அவரை விட்டு விட்டுத் தம்பாட்டில் தீர்மானம் எடுத்தோம் என்று சம்பந்தன் தரப்பு நியாயம் கூறக்கூடும்.

ஆனால், இதுவரை காலமும் வேட்பாளர் நியமனத்திலிருந்து எல்லா விடயங்களிலும் நியமனம் கோருவோரும், நியமனம் வழங்குவோரும், நியமனம் பெறுவோரும் ஒரே தரப்பினராகவே இருந்து வந்துள்ளனர்.

கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுவில் இடம்பெற்றோரே, கட்சியின் வேட்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இதுதான் தமிழரசின் பரவணிப் பண்பியல்பு.

அதன்படி பார்த்தால், தேசியப் பட்டியல் நியமனத்துக்குப் போட்டியிடும் மாவை சேனாதிராசா, அந்த நியமனத்தை வழங்கும் உயர்குழுவில் இடம்பெறுவது தவறல்லவே?

சரியோ, பிழையோ மூன்று கட்சிகளும் தம்மை 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்று இணைத்து அழைத்துக் கொண்டாலும் அவை போட்டியிட்டது என்னவோ இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரிலும் சின்னத்திலும்தான்..

அந்தக் கட்சியின் தலைவருக்குத் தெரியாமல், அல்லது அவரை இருட்டில் வைத்துக் கொண்டு, அந்தக் கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் ஒரு செயலாளர் தங்கள்பாட்டில் ஒரு முடிவை எடுத்து, திடுதிப்பெனத் தேர்தல் ஆணையத்துக்கு அறிவித்தமை என்பது ஒரு ஜனநாயகக் கட்சிக்கான கட்டமைப்புக்குப் பொருத்தமானதே அல்ல.

அதனால் கட்சியின் உள்வீட்டு ஊத்தைகளை பொதுவெயில் அலசும் அவல நிலை தமிழரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

மாவை சேனாதிராசாவில் தவறுகள் இருக்கலாம். தேர்தலில் தோல்வியடைந்த அவர் தேசியப்பட்டில் நியமனம் கேட்பதும் கூடத் தவறாகஇருக்கலாம். அவைவேறுவிடயங்கள். ஆனால், அவற்றுக்காகக் கட்சிக்குள் அவரை ஒதுக்கி, ஓரங்கட்டி, நடவடிக்கை எடுப்பது என்பது முறையற்றது.

அதுவும் அந்தத் தலைமை தாங்கும் கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவரை நியமிக்கும் வியடத்தை அவருக்கு ஒளித்து, மறைத்து முன்னெடுப்பது என்பது ஜனநாயக முறைமையில் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

இது விடயத்தில் ஒரு கடிதத்தை மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி விட்டு, தம்பாட்டில் ஒருவரை நியமிக்க முடிவெடுத்தோம் என்ற சம்பந்தனின் நிலைப்பாடு தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தேசியப்பட்டியல் நியமனத்தை மாவை சேனாதிராசாவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதோ, அல்லது அவருக்குக் கொடுக்காமல் பிறிதொருவருக்குக் கொடுத்தது தவறு என்பதோ எமது நிலைப்பாடு அல்ல.

மாறாக, கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவிற்கும் தெரியாமல், ஒளித்து மறைத்து அதனைச் செய்தது முற்றிலும் தவறான – ஜனநாயக முறைமைக்கு மாறான – நடவழிக்கை என்பதே எமது கருத்து. அதைப் பதிவு செய்ய விரும்புகிறோம்.

# நாடாளுமன்றுக்கு 8 பெண்கள் தெரிவு

## 59 பேர் போட்டியிட்டனர்

நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை போட்டியிட சுமார் 59 பெண்களுக்கு வாய்ப்புக் கிடைத்த போதிலும், 08 பேரே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

**கம்பஹா மாவட்டம்**

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி
1.கோகிலா ஹர்ஷனி - 77,922
2.சுதர்சினி பெணான்டோபிள்ளை - 89,329

**காலி மாவட்டம்**

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி
3.கீதா குமாரசிங்க - 63,358

**மாத்தளை மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி
4.ரோஹினி குமாரி கவிரத்ன – 27,587

**இரத்தினபுரி மாவட்டம்**

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி
5.பவித்திரா வன்னியாராச்சி – 200,977
6.முதித்த பிரசாந்தினி - 65,923
ஐக்கிய மக்கள் சக்தி
7.தலதா அத்துக்கோரள - 45,105

**கேகாலை மாவட்டம்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
8.ரஜிகா விக்ரமசிங்க - 68,802

# வவுனியாவில் சங்கிலி பறித்த இரு கொள்ளையர்கள் கைது





வவுனியா, ஓக.10


வவுனியாவில் சங்கிலி பறிப்புடன் தொடர்புடைய இருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என வவுனியாக் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தமாதம் 30ஆம் திகதி வவுனியா அலகல்லு பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தங்கச்சங்கிலி ஒன்றைப் பறித்துச் சென்றிருந்தனர். அது தொடர்பான முறைப்பாடு வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 20, 23 வயதுடைய இருவரை நேற்று கைது செய்துள்ளமையுடன், சங்கிலி பறிப்பிற்குப்பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும், அபகரிக்கப்பட்ட ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் இந்த இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். இந்தக் கைது நடவடிக்கை குற்றத்தடுப்பு பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரனீத் திசாநாயக்க தலைமையில் நிலந்த, திசாநாயக்க, வசந்த, பிரியங்க, விக்கிரமசூரிய, விஜயசிங்க ஆகியோரை கொண்ட பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

# வெலிகடைக் கைதிகளை இனி உறவினர்கள் பார்வையிடலாம்



கைதிகளை பார்ப்பதற்கு அவர்களின் உறவினர்களுக்கு மீண்டும் அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெலிகடை சிறைச்சாலையில் அண்மையில் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அதனைத் தொடர்ந்து கைதிகளைப் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வெலிகடை சிறைச்சாலை நிர்வாகம் முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஜீவன் தொண்டாவுக்கு இராஜாங்க அமைச்சு?

கொழும்பு, ஓக.10

புதிய அமைச்சரவை அடுத்து வரும் நாள்களில் பதவியேற்கவுள்ளது.

இதில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற புது முக எம்.பிக்களுக்கு விசேட திட்ட அமைச்சுக்கள் வழங்க ஆராயப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலகத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இராஜாங்க அல்லது திட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படலாம் என்றும் ஜீவன் தொண்டமான் இதில் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜீவன் தொண்டமான் தலைமையில் அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில், புதுமுக உறுப்பினராக அதிக கூடிய விருப்புக்களை மாவட்டத்தில் பெற்றுள்ளதால் இந்த அமைச்சுப் பதவியை அவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# நாடாளுமன்றுக்கு இம்முறை தெரிவானோர்: சில தகவல்கள்







நாட்டின் ஒன்பதாவது நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தெரிவாகிவிட்டனர். இந்த நாடாளுமன்றத்தில் விசேட அம்சங்கள் பல பொதிந்துள்ளன.

**தந்தை - மகன்**

**தந்தையர்கள் சிலர் புதல்வர்களுடன் நாடாளுமன்ற அமர்வில் பங்கெடுக்கவுள்ளனர்.**

**✻ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷ.**
**✻ சமல் ராஜபக்ஷவின் புதல்வரான ஷீந்திர ராஜபக்ஷ.**
**✻ தினேஷ் குணவர்தனவின் புதல்வராக யதாமினி குணவர்தன**
**✻ ஜனக பண்டார தென்னகோனின் புதல்வரான பிரமித்த பண்டார தென்னகோன்**

– ஆகியோர் இம்முறை பாராளுமன்றத்தில் ஒன்றாக அமரவுள்ளனர்.

**உறவினர்கள்**

இதேவேளை, பிரபல அரசியல் தலைவர்களின் உறவினர்கள் பலரும் இம்முறை நாடாளுமன்றத் திற்குத் தெரிவாகியுள்ளனர்.

✻ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சமல் ராஜபக்ஷ.

✻ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரியின் மகன் நிபுண ரணவக்க.

✻ மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வர் சஜித் பிரேமதாஸ.

✻ முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் புதல்வர் காஞ்சன விஜேசேகர.

✻ முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் புதல்வர் கனக ஹேரத்.

✻ மறைந்த முன்னாள் பிரதமர் டி.எம் ஜயரட்னவின் புதல்வர் அனுராத ஜயரத்ன.

✻ முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் உறவினரின் மகன் திலும் அமுனுகம.

✻ மறைந்த முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரம நாயக்கவின் புதல்வர் விதுர விக்ரமநாயக்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்த வின் புதல்வர் லொஹான் ரத்வத்த.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் டொக்டர் ஜயலத் ஜயவர்தனவின் புதல்வர் காவிந்த ஜயவர்தன.

✻ மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேம லால் திசாநாயக்கவின் புதல்வர் துமிந்த திசாநாயக்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவின் புதல்வர் பிரசன்ன ரணதுங்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் கலாநிதி ரிச்சட் பத் திரணவின் புதல்வர் ரமேஷ் பத்திரண.

✻ முன்னாள் அமைச்சர் ரஞ்சித் சொய்ஸாவின் மனைவி முதிதா பிரசாந்தி.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் அமரசிறி தொடம் கொடவின் புதல்வர் இசுரு தொடம்கொட.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் அமரசிறி தொடம் கொடவின் சகோதரியின் புதல்வரான சந்திம வீரக்கொடி.

✻ மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் H.G.G. நெல்சனின் புதல்வர் கிங்ஸ் நெல்சன்.

✻ மறைந்த முன்னாள் முதலமைச்சர் மொஹான் சாலிய எல்லாவலவின் புதல்வர் அகில எல்லாவல.

✻ மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் தர்மதாஸ வன்னிஆரச்சியின் புதல்வி பவித்ரா வன்னிஆரச்சி.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண் டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமான்.

✻ மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹீன்மஹத்தயா லியனகேவின் புதல்வர் வருண லியனகே.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி அத்து கோரளவின் சகோதரி தலதா அத்துகோரள.

✻ முன்னாள் அமைச்சர் சரத்சந்திர ராஜகருணாவின் புதல்வர் ஹர்ன ராஜகருணா.

✻ மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஞ்சீவ கவிரத்னவின் மனைவி ரோஹினி கவிரத்ன விஜேரத்ன.

✻ முன்னாள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய மற் றும் முன்னாள் ஆளுநர் குமாரி பாலசூரியவின் புதல் வர் தாரக பாலசூரிய.

✻ இலங்கை மக்கள் கட்சியின் ஆரம்ப செயலாளர் ரஞ்சித் நவரத்னவின் புதல்வர் அசங்க நவரத்ன.

✻ முன்னாள் மாகாண சபை உறுப்பினர் D.V. உபுலின் புதல்வர் D.V. சானு.

✻ அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம்.

✻ முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் உறவினர் முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ் வரன்.

✻ மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் தயா டீ.பெஸ்கு வலின் சகோதரரின் புதல்வர் அனுப பெஸ்குவல்.

✻ மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் ரூபா கருணா திலக்கவின் உறவினர் மகன் கயந்த கருணாதிலக்க.

✻ ஊவா மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் அனுர விதான கமகேவின் சகோதரர் தேனுக விதான கமகே.

✻ மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் H.R.மித்ர பாலவின் புதல்வர் துஷ்மந்த மித்ரபால.

✻ முன்னாள் அமைச்சர் அதாவுட செனவிரத்னவின் உறவினர் உதயகாந்த குணதிலக்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.வின்சன்ட் பெரேராவின் புதல்வர் சுஜித் சஞ்சய பெரேரா.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் S.D.R. ஜயரத்ன வின் புதல்வர் பியங்கர ஜயரத்ன.

✻ 94 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகி வாகன விபத்தில் பலியான கொட்ஃப்ரி பெர்னாண்டோ வின் உறவினர் மகன் அருந்திக பெர்னாண்டோ.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா வின் புதல்வர் நிரோன் பெரேரா.

✻ மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் A.C.S. ஹமீடின் மருமகன் அப்துல் ஹலீம் மொஹமட்.

✻ முன்னாள் பிரதியமைச்சர் H.B.சேமசிங்கவின் புதல்வர் ஹொன் சேமசிங்க.

✻ முன்னாள் பிரதியமைச்சர் S.W.அலவத்துவலவின் புதல்வர் J.C.அலவத்துவல.

✻ முன்னாள் மாகாண சபை உறுப்பினர், கொல்லப் பட்ட தேபந்து நாமல் குணவர்தனவின் சகோதரி கோகிலா ஹர்ஷனி குணவர்தன.

✻ இலங்கை மக்கள் கட்சியின் மறைந்த தலைவர் விஜயகுமாரதுங்கவின் உறவினர் மகன் ரஞ்சன் ராம நாயக்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் சாலிந்த திசாநாயக்க வின் மனைவி மஞ்சுளா திசாநாயக்க.

✻ மறைந்த முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர் னாண்டோ புள்ளேவின் மனைவி சுதர்ஷினி பெர் னாண்டோ புள்ளே.

✻ முன்னாள் நிதியமைச்சர் கலாநிதி N.M.பெரேரா வின் உறவினர் மகன் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

✻ முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீ லால் விக்ரமசிங்கவின் மனைவி ராஜிகா விக்ரமசிங்க.

– தேசியப் பட்டியல் மற்றும் மக்களின் வாக்குக ளால் தெரிவாகியுள்ள இந்த உறவுக்கார அரசியல் வாதிகளை புதிய நாடாளுமன்றத்தில் காண முடி யும்.

**சுவாரஸ்யமான சம்பவங்கள்**

✻ நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் விருப்பு வாக்களிப்பு முறை முடிவுகளின் அடிப்படையில் சிலசுவாரஸ்யமானசம்பவங்கள்நடைபெற்றுள்ளன.

✻ இதன்படி ஆகக்கூடுதலான விருப்பு வாக்குகளை பொதுஜன பெரமுன சார்பில் (527,364)குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ பெற்று நாடாளுமன்றுக்கு தெரிவாகியுள்ளார்.

✻ அதேபோன்று ஈ.பி.டி.பி. சார்பில் வவுனியா மாவட் டத்தில் போட்டியிட்ட குலசிங்கம் திலீபன் 3,203 விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவாகி யுள்ளார்.

✻ அத்துடன் பொதுஜன பெரமுன சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ 81.1 வீத விருப்பு வாக்கையும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கொழும்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ 78.9 வீத விருப்பு வாக்கையும் பெற்றுள்ளனர்.

**அதிக வாக்குகள் பெற்றும் தோற்றோர்**

இதேவேளை உயர்ந்த பட்சமாக விருப்பு வாக்குளை பெற்ற போதிலும் நாடாளுமன்றுக்கு தெரிவாகாத மூவர் தொடர்பான விவரங்களும் வெளியாகியுள்ளன.

✻ இதன்படி பொதுஜன பெரமுன சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டலக்ஸ்மன் யாபா அபேவர்தன 71,106 விருப்பு வாக்குகளை பெற்றபோதிலும் நாடாளு மன்றுக்குத் தெரிவாகவில்லை.

✻ அதேபோன்று பொதுஜன பெரமுன சார்பில் காலி மாவட்டத்தில் போட்டியிட்ட டில்ஷான் விதானகமகே 56, 484 வாக்குகளை பெற்றபோதிலும் நாடாளுமன் றுக்குத் தெரிவாகவில்லை.

✻ களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட இப்திகார் ஜமீல் 54,305 வாக்கு களை பெற்ற போதிலும் நாடாளுமன்றுக்கு தெரிவாக வில்லை.

**குறைந்த வாக்கில் தோற்றோர்**

இதனிடையே இருவருக்கிடையில் குறைந்தளவு விருப்பு வாக்குகள் அடிப்படையில் நாடாளுமன்றுக்கு தெரிவாகாதவர்களின் விவரங்களும் வெளிவந்துள்ளன.

✻ மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட ரோகினி குமார விஜேரட்ன 27,587 வாக்குகளை பெற்ற நிலை யில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட ரஞ்சித் அலுவிகார 27,171 வாக்குகளை பெற்று வெறும் 416 வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்ற வாய்ப்பை இழந்தார்.

✻ அதேபோன்று வன்னியில் பொதுஜனபெரமுன சார்பில் போட்டியிட்ட காதர் மஸ்தான் 13,454 வாக்கு களை பெற்ற நிலையில் ஜனக் நந்தகுமார 12,999 வாக்குகளை பெற்று 455 வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்ற வாய்ப்பை இழந்தார்.

✻ யாழ்ப்பாணத்திலும் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சித்தார்த்தன் 23,840 வாக்குகளை பெற்ற நிலையில் சசிகலா ரவிராஜ் 23,098 வாக்குக ளைப் பெற்று 742 வாக்குகளால் நாடாளுமன்ற வாய்ப்பை இழந்தார்.

✻ கேகாலை மாவட்டத்தில் சுதத் மஞ்சுள 45,970 வாக்கு களை பெற்ற நிலையில் சாந்த குணசேன 45,255 வாக்குகளை பெற்று 715 வாக்குகளால் நாடாளுமன்ற வாய்ப்பை இழந்தார்.

# 2020 பொதுத்தேர்தல் முடிவுகள் ஓர் பார்வை




## 22 தேர்தல் மாவட்ட நிலைவரங்களும், விருப்பு வாக்கில் தெரிவானோரும்

பெரும் சவாலுக்கு மத்தியில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலுக்கான அனைத்து விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவானோர் பற்றிய விவரங்களினை இக் கட்டுரையில் பார்க்கலாம்.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றத்திற்கு 196 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். இதேபோன்று நாடளாவிய ரீதியில் தேசிய பட்டியல் மூலம் 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 225 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவர். 196 உறுப்பினர்களின் விவரங்கள் பின்வருமாறு அமைகின்றது.

**01. வட மாகாணம்**

**யாழ் மாவட்டம்**

இம் மாவட்டத்தில் இம்முறை 67 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 571,848 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இத்தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 394,136 ஆகவும், இவற்றில் 35,006 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 330 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 7 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் அங்கஜன் இராமநாதன் (36,365), இலங்கை தமிழரசு கட்சி சார்பில் சிவஞானம் ஸ்ரீதரன் (35,884), எம்.ஏ சுமந்திரன் (27,834) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் (23,840) ஆகியோரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் டக்ளஸ் தேவனந்தா (32,146), அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (31,658), தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் சி. வி விக்னேஸ்வரன் (21,554) அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**வன்னி மாவட்டம்**

வன்னிதேர்தல்மாவட்டத்தில்இம்முறை 74 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 287,024 வாக்குகள் பதிவுசெய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 224,856 ஆகவும் இவற்றில் 17,019 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 405 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 6 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரிஷாத் பதியுதீன் (28,203), இலங்கை தமிழரசு கட்சி சார்பாக சார்ல்ஸ் நிர்மலநாதன் (25,668), செல்வம் அடைகலநாதன் (18,563) மற்றும் யோகராஜலிங்கம் (15,190) ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் காதர் மஸ்தான் (13,454), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் குலசிங்கம் திலீபன் (3,203) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

02. கிழக்கு மாகாணம்.

**திருகோணமலை மாவட்டம்**

திருகோணாமலை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 74 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 288,868 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 227,117 ஆகவும், இவற்றில் 14,125 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 189 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 4 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக எஸ்.எம் தௌபீக் (43,759), இம்ரான் மஹ்ரூப் (39,029) ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் கபில நுவன் அத்துகோரல (30,056), இலங்கை தமிழரசுகட்சியில் ஆர்.சம்பந்தன் (21,422) ஆவர்களும் இம் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்கள்.

**மட்டக்களப்பு மாவட்டம்**

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 76 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 409,808 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 314,850 ஆகவும் இவற்றில் 16,838 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 304 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 5 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் சிவனேசதுறை சந்திரகாந்தன் (பிள்ளையான்) (54,198), இலங்கை தமிழரசு கட்சி சார்பில் சாணக்யன் இராஜபுத்திரன் (33,332) மற்றும் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) (26,382) ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சதாசிவம் வியாழேந்திரன் (அமல்) (22,218), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அஹமட் செய்னுலாப்தீன் நசீர் (17,599) போன்றோர் இம் மாவட்டத்தில் இருந்த தெரிவு செய்யப்பட்டார்கள்.

**திஹாமடுல்ல மாவட்டம் (அம்பாறை)**

திஹாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 73 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன. இம் மாவட்டத்தில் மொத்தமாக 513,979 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 402,344 ஆகவும், இவற்றில் 16,347 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 540 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 7 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் விமலவீர திஸாநாயக்க (63,594), டீ.சி வீரசிங்க (56,000) மற்றும் திலக் ராஜபக்ஷ (54,203), ஐக்கிய மக்கள் சக்தியில் எம்.எச்.எம் ஹரீஸ் (36,850), பைஸல் காசிம் (29,423) ஆகியோரும், தேசிய காங்கிரஸில் ஏ.எச்.எம் அதாவுல்ல (35,697), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் மொஹமட் முஸரப் (18,389) இம் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள்.

**03. மத்திய மாகாணம்**

**கண்டி மாவட்டம்**

கண்டி தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 72 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 1,129,100 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 869,669 ஆகவும், இவற்றில் 57,091 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 435 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 12 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் திலும் அமுனுகம (171,758), மஹிந்தானந்த அளுத்கமகே (161,471), லொஹான் ரத்வத்த (140,917), அநுராத ஜயரத்ன (140,798), கெஹலிய ரம்புக்வெல்ல (110,832), வசந்த யாபா பண்டார (108,940), குணதிலக ராஜபக்ஷ (49,317), உதயன சாமிந்த கிரிந்திகொட (39,904) ஆகிய எட்டு நபர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரவூப் ஹக்கீம் (83,398), அப்துல் ஹலீம் (71,063), எம். வேலு குமார் (57,445), லக்ஷமன் கிரியெல்ல (52,311) ஆகிய மூன்று உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**நுவரெலியா மாவட்டம்**

நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 75 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 577,717 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 465,065 ஆகவும், இவற்றில் 42,048 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 275 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 8 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து ஜீவன் தொண்டமான் (109,155), சீ.பீ.ரத்நாயக்க (70,871), எஸ்.பீ திஸா நாயக்க (66,045), மருத பாண்டி ரமேஸ்வரன் (57,902), நிமல் பியதிஸ்ஸ (51, 225) ஆகிய ஐவரும், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பழனி திகாம்பரம் (83,392), வேலுசாமி இராதா கிருஷ்ணன் (72,167), மயில்வாகனம் உதயகுமார் (68,119) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

**மாத்தளை மாவட்டம்**

மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 75 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன. இம் மாவட்டத்தில் மொத்தமாக 407,569 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 312,576 ஆகவும், இவற்றில் 24,503 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 184 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 5 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனக பண்டார தென்னகோன் (73,296), நாலக பண்டார கோட்டேகொட (71,404), பிரமித பண்டார தென்னகோன் (67,776), ரோஹண திஸாநாயக்க (50,368), ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியில் ரோஹினி குமாரி கவிரத்ன (27,587) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

**04. ஊவா மாகாணம்**

**பதுளை மாவட்டம்**

பதுளை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 65 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 668,717 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 537,416 ஆகவும், இவற்றில் 38,621 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 288 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 9 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நிமல் சிறிபால த சில்வா (1,41,901), சுதர்ஷன தெனிபிட்டிய (71,766), தேனுக விதானகமகே (68,338), சாமர சம்பத் தஸநாயக்க (66,393), டிலான் பெரேரா (53,081), ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி (50,151) போன்றோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வடிவேல் சுரேஷ் (49,762), அரவிந்தகுமார் (45,491), சமிந்த விஜேசிறி (36,291) ஆகியோரும் தெரிவாகினர்.

**மொனராகலை மாவட்டம்**

மொனராகலை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 73 சதவீதமான வாக்குப்பதிவுகள் இடம்பெற்றது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 372,155 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 301,197 ஆகவும், இவற்றில் 20,312 வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பாக 171 வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறங்கினர். இவர்களில் 6 உறுப்பினர்கள் மாத்திரமே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சசீந்திர ராஜபக்ஷ (104,729), குமார சிறி ரத்னாயக்க (91,530), விஜித பெருகொட (68,984), ஜகத் புஷ்பகுமார (66,176), கயாஜுன் விஜேசிங்க (45,384) ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தர்மசேன விஜேசிங்க (20,662) அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்.

(தொடரும்)

# சிறிகொத்தவை எங்களிடம் ஒப்படையுங்கள்: இல்லையேல் பாரிய விளைவுகளை சந்திப்பீர்

## ரணில் அணிக்கு வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை



சிறிகொத்தவை ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தையும் எமது பொறுப்பில் விடப்படல் வேண்டும். தவறின் ஜனநாயக ரீதியிலான பாரிய எதிர் விளைவுகளை ரணில் விக்கிரமசிங்கவும், அவரது குழுவினரும் அனுபவிக்க நேரிடும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பதுளை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வடிவேல் சுரேஷ்.

அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆதரவாளர்களுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் எனது முதல் நிலை வெற்றியை உறுதிப்படுத்திக் கொடுத்த எனது தொப்புள் கொடி உறவுகள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய, உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனதும், அண்ணன் அரவிந்குமாரினதும் வெற்றிகளைத் தடுப்பதற்கு பல்வேறு வகையில் பேரினவாதிகளை விட எம்மவர்களே பாரிய பிரயத்தனங்களை மேற் கொண்டிருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் சுயேச்சைக் குழுக்களை பேரினவாதிகள் களம் இறக்கியிருந்தனர்.

குறிப்பாக எம்மிருவரது வெற்றியைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அம்முயற்சிகள் அனைத்தையும் எனது தொப்புள் கொண்டி உறவுகள் முறியடித்து, எம்மிருவரையும் முதல் நிலையிலேயே, வெற்றியடைய வைத்தனர். அத்துடன், எமக்கு எதிராகச் செயற்பட்ட அனைவரையும் மண்கவ்வச் செய்தார்கள்.

எமது வெற்றியைத் தடுப்பதற்கு செயற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு தகுந்த பாடத்தை எமது உறவுகள் புகட்டிவிட்டனர். அக் குழுக்கள் ஏற்பட்ட பாரிய பின்னடைவிலிருந்து அவர்களினால் மீளவே முடியாது. அந்தளவில் எமது மக்களின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன.

எமது நாட்டின் பிரதான தேசியக் கட்சியொன்றில் சிறுபான்மையினத்தாரின் பெறுமதிமிக்க வாக்குகளினால் முதல் நிலையில் தமிழர்கள் இருவருமே வெற்றி பெற, எம்மக்கள் பூரண பங்களிப்புக்களை வழங்கினர்.

நான் 49 ஆயிரத்து 762 வாக்குகளைப் பெற்று முதல் நிலையில் வெற்றிபெற்றதுடன் எனக்கு அடுத்த படியாக 45 ஆயிரத்து 491 வாக்குகளை, அண்ணன் அரவிந்குமாரும் பெற்றுள்ளார். இதனை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியையும் நாட்டு மக்கள் அனைவருமே புறக்கணித்து விட்டனர். இதற்குப் பின்பும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினரால், எம்மை ஆட்டிப் படைக்க முடியாது – என் றார்.

# கொரொனாவிலிருந்து 2,576 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களில் மேலும் 12 பேர் நேற்றுமுன்தினம் குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 2,576 ஆக அதிகரித்துள்ளது.

252 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப் பட்டுவருகின்றது. கொரோனாவால் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

# தேசியப் பட்டியல் பேச்சின் போது திகாம்பரம் சீற்றம்

ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த 7 தேசியப் பட்டியல்களில், தமக்கு 3 தேசியப் பட்டியல்களை, வழங்க வேண்டுமென பங்காளிக் கட்சிகள் அடம் பிடித்து வருகின்றன.

எனினும் அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு உடன் பட மறுத்து வருகிறது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்திக்கும், பங்காளிகளுக்கும் இடையில் நடந்த தேசியப்பட்டியல் பேச்சின் போது, முன்னாள் அமைச்சர் திகாம்பரம் கோபத்துடன் வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

# இடையில் விலகிய மங்கள சமரவீரவுக்கு 2,097 வாக்குகள்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருந்து, பின்னர் இடை நடுவில் விலகிக்கொண்ட, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர 2,097 வாக்குகளை பெற்றுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டவர்களின், விருப்பு வாக்குகளின் விவரம் வெளியாகியுள்ள நிலையிலேயே, மங்கள சமரவீர பெற்றுக்கொண்ட வாக்குகளின் விபரமும் வெளியாகியுள்ளது.

# தேர்தலின் பின்பும் வன்முறை இல்லை

பொதுத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் இன்று வரை எந்த வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை என தேர்தல்கள் விவகாரத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

எனினும் இக்காலப்பகுதியில் 5 சிறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளதாக எனவும் அது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் பொதுத் தேர்தலின் பின்னரான காலப்பகுதி சுமுக நிலையில் நகர்வதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய குறிப்பிட்டார்.

வக்களிப்பு தினத்தன்றும், வக்களிப்பு தினத்துக்கு முன்னரும் பதிவான தேர்தல்கள் வன்முறை மற்றும் சட்ட மீறல்கள் குறித்த மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வந்த பொலிஸ் வலயங்கள் ஊடாக இது தொடர்பில் சட்ட மா அதிபரிடம் குறித்த சம்பவங்களை மையப்படுத்தி ஆலோசனை கோரத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய கூறினார்.

தேர்தலுக்கு முன்னர், இடம் பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் 480 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றிருந்த நிலையில் 561 பேர் அது தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் 165 வாகனங்கள் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட விரோத துப்பாக்கியுடன் கேகாலையில் ஒருவர் கைது

கேகாலை பகுதியில் வைத்து சட்ட விரோத துப் பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 8 மில்லி மீற்றர் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ரங்வல பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து குண்டு துளைக்காத பாதுகாப்பு கவசம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த ஹோட்டலின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 447 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியிருந்த 447 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 420 பேரும் கட்டாரில் இருந்து 27 பேருமே இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக தூதவராக அதிகாரிகள் 16 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் விமான நிலை யத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருளுடன் இளைஞன் கைது

மாலாபே பகுதியில் வெளிநாட்டுப் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாலோபயில் உள்ள தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி வெளிநாட்டுப் பெண் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்தக் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இதன்போது அத்துருகிரிய பொலிஸாரால் 30 வயதுடைய சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது

# மட்டக்களப்பில் சாணக்கியனுக்கு மக்கள் அமோக வரவேற்பளிப்பு





நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இரா.சாணக்கியனுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்து வருகின்றனர்.

அவர் 33 ஆயிரத்து 332 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். இந்தநிலையில், தேர்தல் முடிவுகள் வெளியான தினம் முதல் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தனக்கு வாக்களித்த மக்களுக்கு அவர் நன்றி தெரிவித்து வருகின்றார்.

களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், குருக்கள்மடம், செட்டிபாளம், மாங்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்ற இரா. சாணக்கியனுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தமையைப் படங்களில் காணலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி: அம்பாறைக்கு தேசிய பட்டியல்

## எம்.பியானார் கலையரசன்



மட்டக்களப்பு, ஒக. 09

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பி னரும் அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளருமான தவராசா கலையரசன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சிக்கு இம்முறை ஒரேயொரு தேசி யப் பட்டியல் ஆசனம் கிடைத்தது . அதற்கு யாரை நிய மிப்பது என்பது தொடர்பில் கடந்த இரண்டு நாள்க ளாகச் சர்ச்சைகள் தொடர்ந்தன.

இந்தநிலையில்.அம்பாறை மாவட் டம் இம்முறை தமிழ்ப் பிரதிநிதித்து வத்தை இழந்துள்ள நிலையில் அந்த மாவட்டத்துக்கு தேசியப் பட்டியல் ஆச னத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது எனக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் கூறினார்.

இதேவேளை, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத்தெரிவாகியதவராசாகலையரசனுக்கு அம் பாறை மாவட்டத்தின் பல இடங்களில் அவரது ஆதரவாளர்களினால் அமோக வரவேற்பு அளிக்கப் பட்டு வருகின்றது.

# கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு சகலருமே கூட்டு பொறுப்பு

## சீ.வி.கே. சிவஞானம் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக.09

தேர்தல் வீழ்ச்சிக்கு கூட்டுப் பொறுப்பை அனை வரும் ஏற்கவேண்டுமெனத் தெரிவித்துள்ள தமிழர சுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவ ஞானம், கட்சிக்குள் இருக்கின்றவர்கள் சேறு வாரிப் பூசும் வேலையைச் செய்யக் கூடாதென்றும் கேட்டுள் ளார்.

தமிழரசுக் கட்சியின் யாழ் கிளைக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதன் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடைபெற்ற தேர்தலில் எமது கட்சி பின்னடைவைச் சந்தித்து இருக்கின்றது என்பது உண்மைதான். அது வெறுமனே தமிழரசுக் கட்சி மாத்திரமல்லாமல் கூட்ட மைப்பாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதற்கு வெறு மனே தனி நபரிலோ வேறு நபர்களிலோ குழுவிலோ குற்றஞ்சாட்ட முடியாது.

அதற்கு எல்லாருமே பொறுப்பு. கட்சியில் உள்ள செயற்பாட்டாளர்கள் அல்லது கட்சியில் குறிப்பாக முன் னிற்கின்றவர்கள் பொறுப்புபெடுக்கவேண்டும். உண் மையில் அது தான் ஜனநாயகம். அது தான் தலைமைத் துவம். ஆக வெறுமனே ஆளை ஆள் மாறிமாறி குற் றஞ்சாட்டாமல் அல்லது தலைமையை மட்டும் குற்றஞ் சாட்டாமல் எல்லாரும் தான் அந்தப் பொறுப்பை கூட்டுப் பொறுப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் - என்றார்.

# அம்பறைக்கு ஆசனம் வழங்க தமிழரசின் தலைவர் ஒப்புதல்

## துரைராஜசிங்கம் கூறுகின்றார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக. 09

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் இருப்பை நிலை நிறுத்தும் நோக்கில் கட்சித் தலைவரின் ஒப்புத லோடு அம்பாறை மாவட்டத்துக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கியுள் ளதாக தமிழ் அரசுக் கட்சியின் செய லாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்மக்களின் இருப்பில்தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தில் இருந்து தமிழ் அரசுக் கட்சி என்றுமே விலகாது என வாய் மொழியில் மட்டுமல்ல செய லிலும் தமிழ் அரசுக் கட்சி காட்டியுள் ளது. இதன் பிரகாரம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரே தோல்வியுற்ற போதும் தலைவரும் அம்பாறை மண்ணில் அதிக கரிசனை கொண் டவர் என்ற அடிப்படையில் இறுதி முடிவு எட்டப்பட்டது.

இதற்கமையவே அம்பாறை மாவட் டத்தில் கலையரசனுக்கு எமது கட்சிக் குக் கிடைத்த ஒரு தேசிய பட்டியலை வழங்கியுள்ளோம். இதன் மூலம் வடக்கு - கிழக்கின் எந்த மாவட்டத் தையும் கூட்டமைப்பு ஒருபோதும் கைவிடவில்லை என்ற செய்தியைச் சொல்லியுள்ளோம்.

பலரும் நினைத்தார்கள் தலைவ ருக்கு, செயலாளருக்கு, திருகோண மலைக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்படும் என்று.

கட்சி ஆற அமர சரியாகச் சிந்தித்து இறுதி முடிவை அறிவித்துள்ளது. இதனை வடக்கு-கிழக்கில் கூட்டமைப் புக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்லா கூட்டமைப்பை விமர்சித்தவர்கள், எதிர்த்து போட்டியிட்டவர்கள்கூட ஏற் கும் ஒரு சாணக்கிய முடிவை எட்டியுள் ளோம் - என்றார்.

# தேசிய பட்டியல் விடயத்தில் பெரும் நெருக்கடிக்குள் சஜித்!

## காலக்கெடு விதித்துள்ள மனோ – ஹக்கீம் – ரிஷாத்

கொழும்பு, ஒக. 09

தேசியப் பட்டியல் ஆசனப் பங்கீடு தொடர்பில் ஐக்கிய மக் கள் சக்திக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி உச்சமடைந்து நாளை வரை சஜித் பிரேமதாஸவுக்கு காலக்கெடு விதித்து மனோ - ஹக்கீம் - ரிஷாத் கூட்டாக தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 47 ஆசனங்களை விகிதாசார முறையிலும் தேசியப் பட்டியல் ஊடாக 7 ஆசனங்களுமாக 54 ஆசனங்களை பெற்று இரண் டாவது பெரிய அரசியல் தரப் பாக ஐக்கிய மக்கள் சக்தி உரு வெடுத்துள்ளது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சி களான தமிழ் முற் போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லீம் காங்கரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தேசி யப்பட்டியல் ஒதுக்கீட்டில் தமது கட்சிக ளுக்கும் ஆசனங்கள் பகிரப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தன.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக் குக் கூட்டணி 6 ஆசனங்களையும், ரவூப் ஹக்கீம் தலை மையிலான சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் 5 ஆசனங்க ளையும், ரிஷாத் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 4 ஆச னங்களையும் பெற் றுள்ளன. இந்த மூன்று பங்காளிக் கட்சிகளின் 15 ஆச னங்க ளையும் உள்ளடக்கியே 47 ஆச னங்களை பெற்று இரண்டா வது பெரும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி உருவெ டுத்துள் ளது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கிடைத்த தேசியப் பட்டியில் ஆசனப் பங்கீட்டில் தமது கட்சிகளுக்கும் உரிய இடம் தரப்பட வேண்டும். இல்லையேல் தம் சார்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் தனி குழுவாக செயற்படவேண்டிவரும் என நாளை திங்கட் கிழமை வரை காலக்கெடு விதித்து, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகிய மூவரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

தேசியப் பட்டியல் ஆசன ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள இழு பறி நிலை ஐக்கிய மக்கள் சக்திக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

(உ)

# நீதி அமைச்சராக அலி சப்ரி!

## மஹிந்தானந்தவும் அமைச்சரவையில்

கொழும்பு, ஒக. 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அமையவுள்ள புதிய அமைச்சரவையில் நீதி அமைச்சராக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப் பினர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி நியமிக்கப்படவுள்ளார் என அரசியல் வட் டாரங்களில் இருந்து அறியமுடிகின் றது.

அத்துடன், இளைஞர் விவகாரம், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு நாமல் ராஜபக்ஷவுக் கும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச் சுப் பதவி பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுக் கும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிய வருகின்றது.

புதிய அரசின் அமைச்சரவை ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னி லையில் எதிர்வரும் 14 ஆம் திகதி சுப வேளையில் பதவி யேற்கவுள்ளது. கண்டி தலதாமாளிகையிலுள்ள 'மகுல் மடுவ' எனும் மண்டபத்தில் இதற் கான நிகழ்வு ஏற்பாடு செய்யப்படவுள் ளது.

சுற்றாடல், வனஜீவராசிகள் துறை அமைச்சராக உதய கம்மன்பிலவும், நிதி இராஜாங்க அமைச்சராக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் தேசி யப்பட்டியல் எம்.பியுமான அஜித் நிவாட் கப்ராலும் நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன், மஹிந்தானந்த அளுத் கமகே, ரோஹித அபேகுணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் இம்முறை அமைச்சரவைக்கு உள் வாங்கப்படவுள்ளனர்.

கலாசார மற்றும் தேசிய மரபுரிமை கள் அமைச்சராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட வுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. அதேபோல் இறுதிநேரத்தில்கூட அமைச் சுகளுக்கான விடயதானங்கள் மாறக் கூடும் எனவும் கூறப்படுகின்றது.

# மலையகத்தில் கடும் மழை

* தம்பகஸ்தலாவ தோட்டத்தில் நிலச்சரிவு
* 7 குடும்பங்கள் பாதிப்பு
* ரதெல்ல செல்லும் வீதி தாழிறக்கம்



நானுஓயா, சமர்செட், தம்பகஸ்தலாவ தோட்டத்தில்நிலச்சரிவினால்பாதிப்புக்குள்ளான 7 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் தற்காலிகமாக அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக பல இடங்கள் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன.

நானுஓயா சமர்செட் தம்பகஸ்தலாவ தோட்டத்தின் லயன் தொடர் குடியிருப்பொன்றின் மீது மண்மேடொன்று சரிந்து வீழ்ந்ததில் குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதனால் பாதிப்புக்குள்ளான 7 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் கிராம உத்தியோகத்தரின் ஆலோசனைக்கமைவாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பாக அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரண உதவிகள் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

மலையகத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மண்சரிவு மட்டுமின்றி மரங்கள் முறிந்து விழும் நிலை காணப்படுகின்றது.

இதனால் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று இடர் முகாமைத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

இதேவேளை, தலவாக்கலை கிறேட் வெஸ்டன் ஊடாக ரதெல்ல வரைச் செல்லும் பிரதான வீதியில் வங்கிலயாவுக்கும் கல்கந்தவத்தைக்கும் இடையிலான பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளமையால் வீதி பாரிய நில வெடிப்புடன் நிலம் தாழிறங்கியுள்ளது. கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் தலவாக்கலை நகருக்கு இவ்வீதி வழியாக செல்லும் வாகன போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளன. மேலும் இவ்வீதி வழியாக தலவாக்கலை நகர பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள், இதர தொழில்துறைகளுக்கு செல்லுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசியப் பட்டியல் நியமனம்; ஏற்பதற்கு மறுத்தார் ரணில்



ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்துக்குத் தம்மை நியமிக்க மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையைக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

எனினும் தாம் பொது வாழ்க்கையில் இருந்து ஒட்டுமொத்தமாக ஓய்வு பெறப்போகிறேன் என்ற அர்த்தத்தை இந்த அறிவிப்பு தராது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் தேசியப் பட்டிய லுக்கு யாரை நியமிப்பது என்பதுதொடர்பில் கட்சிதொடர்ந்தும் ஆராய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை வெள்ளையடிப்பு செய்த ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு ஒன்றுக்கான வாய்ப்புக்களையும் ரணில் விக்ரமசிங்க நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி வேறு ஒரு கட்சி என்பதை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளதாக ரணில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணையப்போவதில்லை என்று அந்தக்கட்சி யின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தெரிவித்திருக்கிறார்.

# நேற்று முதல் மீள இயங்குகின்றது மத்தள சர்வதேச விமான நிலையம்



மத்தள சர்வதேச விமான நிலைய விமான போக்குவரத்துக்கள் நேற்று முதல் மீள ஆரம்பமாகியுள்ளன.

அதற்கமைய முதலாவது சரக்கு விமானம் நேற்று மத்தள விமான நிலையத்திலிருந்து, அமெரிக்கா நோக்கி பயணிக்கவிருந்தது. 28 மெட்ரிக் தொன் பொருள்களை ஏற்றிய வண்ணம் இவ்விமானம் நேற்று மாலை 07.35 மணியளவில் புறப்படவிருந்ததாக விமானம் பயணிக்க இருந்ததாகவிருந்ததாக விமான நிலைய பிரதான முகாமையாளர் உபுல் கலன் சூரிய தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையம் வளாகத்திலுள்ள பொருள்களை களஞ்சியப்படுத்தும் தொகுதியை கடந்த அரசாங்கம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நெற்களஞ்சியசாலையாக மாற்றியமைத்தது. குறித்த வேலைத்திட்டத்தின் காரணமாக பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டமை பின்னர் தெரிய வந்தது.

இந்நிலையில் கடந்த 5 வருட காலமாக செயலிழந்து காணப்பட்ட மத்தள விமான நிலையம் நேற்று முதல் மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

## மீண்டும் குடும்ப ஆட்சி!

# 4 ஆவது தடவையாக பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்பு









கொழும்பு, ஓக. 09

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் 13 ஆவது பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இப்பதவிப்பிரமாண நிகழ்வு இன்று முற்பகல் வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த களனி ரஜ மகாவிகாரை புனித பூமியில் இடம்பெற்றது.

நான்காவதுதடவையாகவும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ 2005 முதல் 2015 வரை இரண்டு முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஐம்பது வருட அரசியல் வரலாற்றைக் கொண்டவர். 1970ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அவர், 1995ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை அமைச்சரவை அமைச்சராக குறிப்பிடத்தக்க முக்கிய பணிகளை நிறைவேற்றினார்.

2004 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி முதன் முறையாகப் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட அவர், 2018 ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி இரண்டாவது முறையாகவும், 2019 நவம்பர் மாதம் 21ஆம் திகதி மூன்றாவது முறையாகவும் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்தார்.

பத்து வருட காலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, சுமார் 30 வருட காலமாக நாட்டை ஆட்கொண்டிருந்த தீவிரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, நாட்டை துரித அபிவிருத்தியை நோக்கி இட்டுச்சென்றார்.

குருநாகல் மாவட்டத்தில் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். இது இலங்கையில் பொதுத் தேர்தலொன்றில் வேட்பாளர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிக விருப்பு வாக்குகள் என வரலாற்றில் பதிவா னது.

இரண்டு முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்து பிரதமர் பதவிக்கு நான்காவது தடவையாகவும்தெரிவுசெய்யப்பட்ட முதலாம் நபராக மஹிந்த ராஜபக்ஷ வரலாற்றில் இடம் பிடித்தார்.

மகா சங்கத்தினர் பிரித் பாராயணம்செய்து பிரதமருக்கு ஆசீர்வாதம் வழங்கினர். பதவிப் பிரமாண நிகழ்வை தொடர்ந்து ஜனாதிபதியும் பிரதமரும் விகாரைக்கு சென்று சமயக் கிரியைகளில் ஈடுபட்டனர்.

பின்னர் ஜனாதிபதி பிரதமரைச் சூழ திரண்டிருந்த மக்களிடம் சென்று அவர்களுக்கு தனது வணக்கத்தை தெரிவித்தார்.

மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள், ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர், தூதுவர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள, புதிய அரசுக்கு ஆதரவளிக்கும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப் பினர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுமந்திரனை வெளியேற்றினால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருப்படும்

## விசனத்துடன் கூறுகின்றார் தமிழரசுப் பெண் பிரமுகர்

யாழ்ப்பாணம், ஓக.10

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு அக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் மட்டுமே காரணம் என்று தமிழரசு கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் உப தலைவி மிதுலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சுமந்திரனை கட்சியில் இருந்து வெளியேற்றினால் தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் உள்ளிட்ட தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பயணிக்கும் வாய்ப்புக் கிட்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2015 ஆம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குகளுக்கு சரி அரைவாசி குறைந்த அளவு வாக்குகளையே எமது கட்சி வேட்பாளர்கள் பெற்றுள்ளனர். இந்த வாக்கு வீழ்ச்சிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனே பொறுப்பாளியாக வேண்டும்.

ஊடகப் பேச்சாளர் என்ற பதவியினை வைத்துக் கொண்டு தான்தோன்றித்தனமான கருத்துக்களை வெளியிடுவதும் , அவருடைய செயற்பாடுகளுமே தோல்விக்கு காரணமாக உள்ளன. இதனை அனைத்து மக்களும் அறிவார்கள். குறிப்பாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை தோற்கடிக்க வேண்டும் என்று கட்சி வேட்பாளர்களே திட்டமிட்டு செயற்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கையின்படி சுமந்திரனின் நடவடிக்கைகள் மற்றும் அவர் வெளியிடும் கருத்துக்கள்தான் கட்சியின் தோல்விக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையினை வெளியிடாமல் மூடி மறைத்துள்ளார்கள்.

சுமந்திரனாலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன் போன்றவர்கள் வெளியேறியிருந்தார்கள்.

தமிழர் தேசங்களில் புதிய கட்சிகள் உருவாகியுள்ளமைக்கும், மக்களின் பிரிவுகளுக்கும் சுமந்திரன்தான் காரணம். ஒருவர் மட்டும் முடிவுகளை எடுப்பதே கட்சிக்குள் பிளவுபாடுகளை ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது.

சுமந்திரன் மீது எனக்கு தனிப்பட்ட கோபங்கள் எவையும் இல்லை. கட்சியின் எதிர்கால நலனுக்காகவே இவற்றைத் தெரியப்படுத்துகின்றேன். கட்சியின் சகல விடயங்களிலும் தலையிட்டுவிட்டு, இப்போது தோல்வியை மட்டும், தலைவர், செயலாளர் மீது போடுவது என்பது பொருத்தமற்ற ஒன்று.

சுமந்திரனைக் கட்சியிலிருந்து விலக்கினால் தமிழ் தேசிய கட்சி மட்டுமல்லாமல் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு அணியில் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழரசு கட்சியை மறுசீரமைக்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இப்போது உள்ளோம். இதனால் கட்சியின் தலைவரை தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.




அம்பாறை மாவட்டத்தில் கலையரசன் தேசிய பட்டியலில் ஆசனம் வழுங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. ஆனால் அது உறுதிப்படுத்தப்பட்டதாக எனக்கு தெரியவில்லை.

பிரதேசவாதமாக நான் பேசவில்லை. தேசிய பட்டியலுக்கு மாவை சேனாதிராஜா அல்லது சசிகலா ரவிராஜ் தெரிவு செய்யப்பட வேண்டும். எதுவாக இருந்தாலும் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் கூடியே முடிவுகளை எடுக்க வேண்டும்.

மேலும் சசிகலாவிற்கு தேர்தலில் நடந்ததாக சொல்லப்படும் அநீதிகளுக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நாங்களும் சசிகலாவிற்கான குரல் கொடுத்து, அவர் பின் நிற்போம். - என்றார்.

# உழவு இயந்திரம் குப்புறக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் சாவு

## கரடியனாறு வயலில் சம்பவம்



மட்டக்களப்பு – பதுளை வீதியை அண்டியுள்ள கரடியனாறு பண்டாரியாக்கட்டு வயல் பகுதியில் உழவு இயந்திரம் குப்புறக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்தில் வேப்பவெட்டுவான், கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உதயராசா மயூரன் (வயது 27) என்பவரே பலியாகியுள்ளார் எனஒ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயலை உழுது பண்படுத்துவதற்காக வெள்ளிக்கிழமை மாலை வீட்டிலிருந்து உழவு இயந்திரத்தைச் ஓட்டிச் சென்று நெல் வரப்புக் கட்டில் ஏறும் போது உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், உழவு இயந்திரத்தின் கீழே நசுங்கி சாரதி படுகாயமடைந்துள்ளார்.

அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே இவர் உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முழுநேரக் களப் பணியாளனாக சேவை செய்வார் கலையரசன்

முழுநேரக் களப் பணியாளனாக மக்களுடன் இணைந்து தாம் பணியாற்றவுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்லவுள்ளார் என அறிவிக்கப்பட்டிருக்கும் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் கலையரசன் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“இந்த ஆசனம் எனக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் கட்சியின் கட்டளைக்கு அமைவாகவும் மக்களின் தேவைகளை அறிந்தும் செயற்படுவேன் என இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், முழுநேர களப் பணியாளனாக நின்று பணிபுரிவேன் என்றும், அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பின்னடைவை ஒரு சவாலாக ஏற்று, வடகிழக்குப் பிரதேசங்களில் எங்களுடைய கட்சியை மிகவும் கட்டமைத்து எதிர்காலத்தில் நடைபெறப்போகின்ற எந்தத் தேர்தல்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெறும் வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம்

கொழும்பு, ஓக. 09

அடுத்த சில மாதங்களில் மேலும் 15 ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரியர்களாக தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிய மிக்கப்படவுள்ளனர்.

கொவிட் – 19 நிலமை மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக கடந்த சில மாதங்களில் இந்த ஆசிரியர்களை நியமிக் கும் திட்டம் தாமதமானது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களும் க.பொ.த உயர்தரத்துக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப் படவுள்ளது.

ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பானவிவரங்களை வழங்குமாறு கல்வி அமைச்சு ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருந்தது. அதன்படி, சுமார் 5 ஆசிரியர்கள் மாகாண பாடசா லைக்கு அனுப்பப்படுவார்கள் என்று கல்வி அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை, ஆசிரியர்கள் அதிகமாக உள்ள பாடசாலைகளில் இருந்து அவர்களை வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு இடமாற்று வதன் மூலம் ஆசிரியர்களின் வெற்றி டத்தை ஒழுங்குபடுத்தும் திட்டத்தையும் அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

கொவிட் – 19 நிலமை மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக நீண்டகாலமாக மூடப்பட்ட பின்னர் மீண்டும் திறக்கப் படவுள்ள பாடசாலைகள், எந்தவொரு இடையூறும் இல்லாமல் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய அமைச்சு எடுக்கும் ஒரு உத்தி இது என்று கல்வி அமைச்சின் அதிகாரி குறிப்பிட்டார்.

மற்றொரு திட்டத்தின் கீழ், ஆயிரம் ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்க வும் அரசு எதிர்பார்த்துள்ளது. இந்த திட் டத்தில் ஆள்சேர்க்கப்படுவோர், நியமனத்துக்கு முன்பு, ஆசிரியர் மற்றும் கல்வி டிப்ளோமாவை முடிக்க வேண் டும். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எழுப்பிய பிரச்சினைகள் காரணமாக இந்தத் திட்டம் தாமதமானது என்று அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

# மன்னாரில் கரை ஒதுங்கியது பாரிய கடற்பன்றி ரக மீனினம்



மன்னார், ஒக. 10

மன்னார் கடற்கரை ஆதாம் பாலத்திற்கு உட்பட்ட தேசிய வனப் பூங்கா பகுதியில் அருகிவரும் பாரிய மீன் ஒன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

கடற்பன்றி என பெயருடைய பாரிய மீனே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

கடற்கரையோர ரோந்துப்பணியில் ஈடுபட்ட கடற்படையினர் இதனை அவதானித்து குறித்த பகுதி வன ஜீவ ராசிகள் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கியிருந்தனர்.

இதனை தொடர்ந்து அந்தத் திணைக்கள அதிகாரிகள் அங்கு வந்து மீனைப் பார்வையிட்டமையுடன் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

மீனின் ஒருபகுதி உணவுக்காக வேட்டையாடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்ட நிலையில், மீன் உடற்கூற்றுப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த கடற்பன்றி இனமானது தற்போது அருகிவரும் பாலூட்டி மீன் இனத்தைச் சேர்ந்தது. கரையொதுங்கிய கடற்பன்றி 3.3 மீற்றர் நீளமானதும் சுமார் 700 கிலோ கிராம் எடை கொண்டதாகும்.

உடற்கூற்றுபரிசோதனைஅறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த அறிக்கை மன்னார் நீதிவான் நீதிமன் றிற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடதக்கது.

# 15 இலங்கைப் பெண்கள் பெய்ரூட் வெடிப்பில் காயம்

## 285 இலங்கையரை அழைத்து வர ஏற்பாடு



பெய்ரூட் நகரில் இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த அனைத்து இலங்கையர்களும் பெண்கள் என அந்நாட்டுக்கான இலங்கை தூதரகம் உறுதி செய்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 15ஆக அதிகரித்துள்ளது.

லெபனானில் நிர்கதிக்குள்ளாகியுள்ள 285 இலங்கையர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வரத்திட்டமிடப்பட்டுள்ளதாக லெபனான் மற்றும் சிரியாவுக்கான இலங்கை தூதுவர் ஷானி கருணாரட்ன தெரிவித்துள்ளார். வெடிப்புச் சம்பவத்தில் பெய்ரூட்டில் அமைந்துள்ள இலங்கை தூதுரகத்துக்கும் அதிகாரிகளின் உத்தியோக பூர்வ இல்லங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

அவற்றைப் புனரமைக்கும் அதே வேளை பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காகவும் தூதரகம் நாளாந்தம் இயங்குகின்றது. தூதுவர் ானி கருணாரட்ன பெய்ரூட் நகரில் ஏற்பட்ட இப்பாரிய அனர்த்தம் குறித்து அங்கு நேரடியாக விஜயம் செய்து அறிந்துக் கொண்டுள்ளார். அத்துடன் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் குறித்தும் அவர் கண்டறிந்தார்.

இதுவரை இலங்கையர்கள் எவரும் உயிரிழக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் வெடிப்பு சம்பவத்தில் இதுவரை 154 பேர் உயிரிழந்தும் 5000கும் கூடுதலானோர் காயமடைந்தும் உள்ளனர். ஏற்பட்டுள்ள இடர் நிலைமைக்கு மத்தியில் தூதரகத்துடன் தொடர்ச்சியாகத்தொடர்பை ஏற்படுத்தி சேவைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுகொள்வதற்கு பெரும்பாலான இலங்கையர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கு உலர் உணவுகளை விநியோகிக்கும் செயற்பாடும் தொடர்ச்சியாக இடம்பெறு கின்றது. மேலும் பெரும்பாலானோர் உலர் உணவுகளை பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். இதனால் இவர்கள் தொடர்பான தகவல்களை லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமைதிக்காக்கும் படைப்பிரிவுக்கு வழங்க தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெடிப்புச் சம்பவத்தில் அதிர்ச்சிக்குள்ளாகிய பலர் தற்போது பல்வேறு நோய்த் தாக்கங்களுக்குட்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்களுக்கு வழங்குவதற்காக தற்போது பாரிய அளவில் இரத்த பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

இந்நிலைமையை கருத்திற் கொண்டு லெபனானில் உள்ள இலங்கை தூதுவர் உள்ளிட்ட அதிகாரிகள் உடனடியாக இரத்தத்தை தானமாக வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த நடவடிக்கைக்கு பெரும்பாலானோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

வெடிப்புச் சம்பவத்தினால் ஏற்பட்ட சேதத்தை போன்று ஏற்பட்டுள்ள பல நெருக்கடிளுக்கு மத்தியில் லெபனானில் உள்ள பெரும்பாலான மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதன்போது பொலிஸாருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கடும் மோதல் நிலவியதாக அந்நாட்டில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில்**
**வருடாந்த உற்சவத்தையொட்டி**
**'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விபரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. வேதங்கள் எத்தனை? அவை எவை?**

..........................................................................................

**2. அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படும் முருகன் ஆலயம் எது?**

..........................................................................................

**3. நல்லூர்க் கந்தன் மீது பாடப்பட்ட திருவூஞ்சலைப் பாடியவர் யார்?**

..........................................................................................

**4. மகா பாரதத்தை எழுதிய முனிவர் யார்?**

..........................................................................................

**5. கந்தபுராணப் போரில், முருகப் பெருமானின் நவ வீரர்கள் யார்?**

..........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

08

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..........................................................
2. பிறந்த திகதி :..........................................................
3. கல்வி கற்கும் தரம் :..................................................
4. பாடசாலை :..............................................................

...........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# ரவிராஜின் சிலையை அலங்கரித்த பூச்சாடிகள் நேற்று மாலை சேதம்

## கறுப்பு,சிவப்பு துணிகளும் அகற்றல்





யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ். சாவகச்சேரி பிரதேச செயலக முன்றிலில் அமைந்துள்ள அமரர் ரவிராஜின் உருவச்சிலையை சுற்றி அலங்கரிங்கப்பட்டிருந்த பூச்சாடிகள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அமரர் ரவிராஜின் உருவச்சிலையை மூடி சசிகலா ரவிராஜின் ஆதரவாளர்களால் நேற்றைய தினம் கட்டப்பட்டிருந்த கறுப்பு, சிவப்பு துணிகளும் அகற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய இலங்கை அரசுடன் உறவுகளை புதுப்பிக்க விரும்புகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஒக. 10

இலங்கை - அமெரிக்க இரு தரப்பு உறவைப் புதுப்பிக்கும் வகையில் இலங்கையின் புதிய அமைச்சர்களுடனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நெருங்கி பணியாற்ற அமெரிக்கா எதிர்பார்ப்பதாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். தமது ருவிட்டர்பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுபீட்சம், சட்டத்தின் ஆட்சி, மற்றும் பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களை பலப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தும் விதத்தில் இருதரப்பு உறவொன்றை புதுப்பிக்க புதிய அமைச்சர்களுடனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நெருங்கி பணியாற்ற அமெரிக்கா எதிர்பார்க்கிறது. என்றும் அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்த அரசியலால் ஒரு சதமும் என் உடம்பில் சேர விடமாட்டேன்

## முஷாரப் வாக்குறுதி



கொழும்பு, ஒக. 10

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக ஆகிவிட்டால் முதலாவதாக வாகன பேர்மிட் வரும். அதில் இரண்டு கோடி, மூன்று கோடி என்று உழைத்துக் கொள்வார்கள். எனவே, நான் அல்லாஹ்வின் மாளிகையில் இருந்து சத்தியமிட்டு வாக்குறுதி வழங்குகிறேன் இந்த அரசியலால் ஒரு சதமும் என் உடம்பில் சேர விடமாட்டேன்.

- இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஷாரப் முதுநபீன் தெரிவித்தார்.

வெற்றி பெற்ற பின்னர் பள்ளிவாசலுக்குச் சென்று வணக்க வழிபாட்டில் ஈடுபட்டு மக்களுடன் உரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நான் ஒரு சட்டத்தரணியாக இருக்கின்றேன். எனக்கு இருக்கின்ற 'கோட்' போதும். அதனூடாக நான் உழைத்து என்னுடைய குடும்பத்தையும் என்னையும் காப்பாற்றிக் கொள்வேன்.

என்னுடைய நோக்கம் இந்தச் சமூகம் வெற்றி பெற வேண்டும். அதற்கான வழியை அல்லாஹ காட்டித் தந்துள்ளான் - என்றார்.

# முன்னணியின் கூட்டம் குழப்பப்பட்டது?

இணுவிலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் ஆவா குழுவின் அச்சுறுத்தலால் நடைபெறவில்லை என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. புலனாய்வாளர்களின் பின்புலத்தை கொண்ட ஆவா குழு வாள்களைக் காட்டி மிரட்டி, கதிரைகளை அடித்து உடைத்ததால் குறித்த மக்கள் சந்திப்பு நடைபெறவில்லை என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி ருவிட்டர் பதவு ஒன்றில் தெரிவித்துள்ளது.

# தேசியப்பட்டியல் ஆசனத்தை மாவைக்கே வழங்கவேண்டும்

## தமிழ் அரசு யாழ். கிளை அதிரடித் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக. 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனத்தை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கே வழங்க வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ் மாவட்டக்கிளை கூடிமுடிவுசெய்துள்ளது.

இன்று பகல் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் கூட்டம் நடந்தது.

இதன்போது – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தையும் மாவை சேனாதிராசாவுக்கே வழங்க வேண் டும். அதைப் பங்காளிக் கட்சிகளுடனும் பேசி முடிவு செய்யவேண்டும். ஒரு வேளை, தேசியப்பட்டியல் தொடர்பாக வேறு ஏதாவது முடிவு செய்திருந்தால், அந்த முடிவை மீள்பரிசீலனை செய்யவும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 16 ஆம் நாளான நேற்று, மாலை உற்சவத்தின்போது, வள்ளி, தெய்வானை சமேதரராக முருகப் பெருமான் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் காட்சி.

படப்பிடிப்பு : ஐங்கரன் சிவசாந்தன்

# யானை மோதுண்டு உயிரிழப்பு; வடக்கு ரயில் சேவை ஸ்தம்பிதம்

முல்லைத்தீவு, ஒக. 09

ரயிலுடன் காட்டு யானையொன்று மோதியதைத் தொடர்ந்து, வடக்கு ரயில் வழித்தடத்திலான சேவைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு, கோட்டை நோக்கி பயணித்த சிறீதேவி கடுகதி ரயில், மாங்குளத்துக்கும் புளியங்குளத்துக்கும் இடையில் இன்று அதிகாலை 3.45 மணியளவில் காட்டு யானையொன்றுடன் மோதியுள்ளது என ரயில் கட்டுப்பாட்டறை தெரிவித்துள்ளது.

இதனைச் சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ரயில் கட்டுப்பாட்டறை மேலும் தெரிவித்துள்ளது.

ரயிலுடன் மோதுண்ட யானை உயிரிழந்துள்ளது.





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2020 இல் வெளியிடப்பெற்றது.